1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரை இல்லை. இப்படிப்பட்ட ஒரு திட்டம் இந்தியாவிலேயே இதுதான் முதல் முறையானது என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துவக்கவிருக்கின்ற வேத ஆகமக் கல்லூரியில், தற்சமயம் கோயில்களில் பூசை செய்பவர்களுக்கும் இடம் அளிக்கப்படுமா? அல்லது புதிதாக சேர்பவர்கள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோவில்களில் அர்ச்சகர்களாகவும், பூசகர்களாகவும், பூசாரிகளாகவும் பணியாற்றி வருபவர்களுக்குத் தான் ஒரு ஆண்டுக்காலம் (Refresher Course) நடத்தப்படும் என்று இப்பொழுது கூறினேன். தொடங்கப்படவிருக்கிற வேதாகமக் கல்லூரியில் அவர்களும் வேண்டுமானால் மாணவர்களாகச் சேரலாம். அதில் எந்தத் தடையுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. இரா. நடேசன், மாண்புமிகு நிதியமைச்சர்.

63—

துணைக் கருவூலம் அமைத்தல்.

*9059—திரு. இரா. நடேசன்:
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில், ஒரு துணைக் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் ஒரு புதிய துணைக் கருவூலம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏதும் ஏற்படவில்லை.

திரு. இரா. நடேசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவசியம் ஏற்படவில்லை என்று தெரிவித்தார்கள். புதிய கருவூலம் ஒன்று அமைவதற்கு என்னென்ன விதிகள், சாத்தியக் கூறுகள் வேண்டும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கருவூல விதிகளின் படி, ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு துணைக் கருவூலம் இருக்க வேண்டும். அதன்படி புதிய வட்டம் ஒன்று ஏற்படுத்தும் போது, வட்டத் தலைமையிடங்களில் துணைக் கருவூலம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே 202 துணைக் கருவூலங்கள், வங்கி மற்றும் வங்கி சாரா கருவூலங்கள் என்ற முறையில் தமிழ்நாட்டில் உள்ளன. அதில் 170 துணைக் கருவூலங்கள் வட்ட மைய இடங்களிலும், 32 துணைக் கருவூலங்கள் வட்ட மையம் இல்லாத பிற இடங்களிலும் உள்ளன. திருவட்டாறு ஒரு ஊராட்சி ஒன்றியமாகும். அது கல்குளம் வட்டத்தைச் சார்ந்தது. கல்குளம் வட்டத்தில் ஒரு சார்நிலை கருவூலம் அமைந்துள்ளது. அது திருவட்டாறிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 1985 ஆம் ஆண்டு கல்குளம் சார்நிலைக் கருவூலத்தை இரண்டாகப் பிரித்து அங்கிருந்து தென் மேற்கில் 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இரணியல் என்ற இடத்தில் புதிதாக ஒரு சார்நிலைக் கருவூலத்தை அமைத்தார்கள். மேலும் திருவட்டாறிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் குழித்துறை என்னும் இடத்தில் விளவன் கோட்டில் சார்நிலைக் கருவூலம் அமைந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில், போக்குவரத்து வசதியை நோக்குகையில், திருவட்டாறு, கல்குளம் சார்நிலைக் கருவூலத்திற்கோ அல்லது விளவன்கோடு சார்நிலைக் கருவூலத்திற்கோ எளிதில் சென்றுவர இயலும். புதிய கருவூலம் அமைப்பதால் அரசுக்கு ஏற்படும் செலவை உற்று நோக்கும் போது, திருவட்டாறில் உள்ள அரசு அலுவலகங்கள், சார்நிலைக் கருவூலங்களுக்குச் சென்றுவர செலவழிக்கப்படும் பணத்தொகை மிகக் குறைந்த அளவில்தான் இருக்கும். மேலும் கல்குளம், விளவங்கோடு சார்நிலைக் கருவூலங்களிலுள்ள தற்போதைய வேலைப்பளு, அது மூன்றாகப் பிரிக்க வேண்டிய அவசியத்திற்கு இல்லை. திட்டமில்லா இனங்களின் செலவைக் குறைக்க வேண்டுமென்ற நிலை உள்ளதாலும், திருவட்டாறில் புதிதாக சார்நிலைக் கருவூலத்தை அமைக்கத் தேவையான அவசியம் இல்லாததாலும் இந்த கோரிக்கை ஏற்கப்படவில்லை.

முற்பகல் 9–50

திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு ஊராட்சி ஒன்றியமானது கோதையாறிலிருந்து தக்கலை, அழகியமடம் வரை இருக்கின்றது. கோதையாறிலிருந்து திருவட்டாறு வர வேண்மென்றாலே பாக்கி 35

கிலோ மீட்டர் இருக்கிறது. திருவட்டாறிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தக்கலையில் உள்ள கருவூலத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் காரணம், அந்த இடம் மலைப் பிரதேசமாக இருப்பதால் அங்கிருந்து பஸ் ஏறிப் போவதற்குச் சிரமமாக இருக்கிறது. டி.ஏ. என்று சொல்லி பணம் பெறப்படுவதால் அரசாங்கத்திற்குத் தான் நிறைய செலவும் ஆகின்றது. ஆகையால், கருணை கூர்ந்து வரும் நிதியாண்டிலாவது ஒரு கருவூலம் திருவட்டாறு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த குலசேகரத்திலோ, திருவட்டாறிலோ, பேச்சிப்பாறையிலோ அல்லது வேறு எங்கேயாவது துவங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருவட்டாறில் சார்நிலைக் கருவூலம் வேண்டுமென்று கேட்டார்கள். திருவட்டாறை வைத்து அதனைச் சுற்றி 12 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தூரத்திலும், வேறு ஒன்று குழித்துறையிலும் ஆக 3 கருவூலங்கள் இருக்கின்றன. இன்னொன்று ஏற்படுத்துகின்ற அளவுக்கு இப்போது இருக்கிற கருவூலங்களில் வேலைப் பளு வர வேண்டும். அப்படி வேலைப் பளு வருகின்ற நிலையிலே தான், சில வட்டங்களில்—ஒரு துணைக் கருவூலத்தில் அதிகமான வேலைப்பளு இருக்கும் என்பதற்காக இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், மற்றொரு துணைக் கருவூலத்திற்கு அவசியம் ஏற்படுகிறது. இப்போது திருவட்டாறைச் சுற்றி இருக்கின்ற கருவூலங்களில் வேலைப் பளு இரண்டாகப் பிரிக்க வேண்டிய அளவுக்கு அவசியம் ஏற்படவில்லை. அப்படி அவசியம் ஏற்படுகின்ற காலம் வரும்போது வேண்டுமானால் திருவட்டாறில் வைக்கலாமா என்பதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

64—

கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகளின் செலவின விகிதத்தை உயர்த்துதல்.

*11060— திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறைச் சாலைகளில் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, மருந்துகள் மற்றும் சுகாதார சாதனங்கள் ஆகியவற்றிற்கான செலவின விகிதம் (Rate of expense ratio) எந்த ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது?